மலர் 1 இதழ் 1 ஜுலை, 2016 ISSN : 2454-3993

# திருக்குறள் காமத்துப்பாலில் உவமைகள்

**ச. தனலெட்சுமி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
எஸ்.எஃப்.ஆர். மகளிர் கல்லூரி,
சிவகாசி.

**முன்னுரை**

மனிதனுக்குத் தேவையான வாழ்வியல் அறங்களை வகுத்துக் காட்டிய வள்ளுவரின் திருக்குறளில் இடம் பெற்றுள்ள உவமை பற்றிய கருத்துக்களை விளக்கும் விதத்தில் அமைகிறது இக்கட்டுரை. திருக்குறளில் காமத்துப்பாலில் இடம்பெற்றுள்ள உவமை பற்றி விளக்குவதே இவ்வாயின் நோக்கம்.

ஒரு பொருளை பிறிதொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறும் உவமையே அணிகள் பலவற்றிற்கு அடிப்படை என்பர். உவமையைத் "தாய் அணி" என்றும் கூறுவர். பொருளணிகளில் பல உவமை என்ற அணியின் அடியாகவே தோன்றியுள்ளன. முன்ன விலக்கணி, அதிசயவணி, ஏதுவணி, ஆர்வ மொழியணி, தன்மேம்பாட்டுரையணி முதலிய அணிகளில் இரு பொருளை ஒப்பிட்டுக் கூறும் கருத்து வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ இருத்தலால் அவற்றை உவமையின் திரிபுகளாகவே கொள்ளலாம். தொல்காப்பியர் அணிகள் பலவற்றிற்கு அடிப்படையாக உள்ள உவமை ஒன்றை மட்டுமே விளக்கியுள்ளார்.

வடமொழி அறிஞர் அப்பைய தீட்சிதருக்கும் இக்கருத்து உடன்பாடாதலை,

**"உவமை என்னும் தவலருங் கூத்தி**
**பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து**
**காப்பிய அரங்கிற் கவினுறத் தோன்றி**
**யாப்பிற புலவர் இதயம்**
**நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே"**[1]

என்னும் அவரது சித்திரமீமாஞ்சைக் கூற்றினால் தெளியலாம்.

மனிதன் முதலில் தான் சொல்வதைத் தெளிவுபடச் சொல்லுவதற்கு உவமையைக் கையாண்டான். பிறகு தான் சொல்ல வந்ததை அழகுபடச் சொல்வதற்கு அதைப் பயன்படுத்தினான். பின்னர்த் தனது கற்பனைப் படைப்புகளையெல்லாம் இந்த ஒப்புமை அறிவு மூலம் உருவாக்கி மகிழ்ந்தான்[2] என்பர் தமிழண்ணல். எனவே தெளிவு, அழகு, மகிழ்ச்சி ஆகிய மூன்றையும் உவமை தோன்றுவதற்கு உரிய அடிப்படைகள் எனலாம்.

**காமத்துப்பாலில் உவமைகள்**

திருக்குறளில் மொத்தம் 247 உவமைகள் இடம்பெற்றுள்ளன. காமத்துப்பாலில் மட்டும் 67 உவமைகள் வந்துள்ளன. திருக்குறளில் இடம்பெற்றுள்ள உவமைகளுள் ஏறத்தாழ நான்கில் ஒரு பங்கு உவமைகள் காமத்துப்பாலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். காமத்துப்பாலில் வரும் உவமைகளை,

- காதலன் கூறும் உவமைகள்
- காதலி கூறும் உவமைகள்
- தோழி கூறும் உவமைகள்
- அற உவமைகள் என்ற உட்தலைப்புகளின் கீழ் பகுத்தாய்வோம்.

**காதலன் கூறும் உவமைகள்**

காதலன் சிறந்த வீரன், பல களங்கள் கண்டவன், வெற்றிகள் பல பெற்றவன், பீடு வாய்ந்தவன், காதலில் வனப்பால் வருந்தி, அவளது சிறு நுதலுக்கு தோற்றவன். மேலும் அவளது குறிப்பு நோக்கால் வருந்துவதற்கு பின்வரும் உவமையைக் கூறுகிறான். "கண்ணுக்கு இனிய அழகினை உடைய காதலி" என் நோக்கிற்கு எதிர்நோக்குதல், தானே தாக்கி வருத்த வல்ல அணங்கு, ஒரு சேனையையும் கொண்டு வந்து தாக்குவது போல் உள்ளது.

**"நோக்கினாள் நோக்குஎதிர் நோக்குதல் தாக்குஅணங்கு**
**தாளைக்கொண் டன்னது உடைத்து"** (1082)

இக்குறளில் காதலனின் கள அனுபவம் உவமை வடிவில் அழகுற வெளிப்படுத்தியுள்ளது.

காதற் சிறப்புரைத்தல் என்னும் அதிகாரத்தில் காதலன் தன் காதல் மிகுதியைக் கூறுகிறான். மெல்லிய மொழிகளைப் பேசுகின்ற காதலியின் துாய பற்களில் ஊறிய நீர், பாலுடன் தேனைக் கலந்தாற் போல் மிகவும் இனிமை உடையது என்று கூறுகிறான் காதலன்.

**"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி**
**வால்எயிறு ஊறிய நீர்"** (1121)

"பாலோடு தேன் கலந் தற்றே", "உடம்பொடு உயிரிடை அன்ன" (1122) என வரும் உவமைகள் அத்துவித நிலையைக் குறிப்பதாக தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் கூறுகின்றார்.

காதலிக்கும் தனக்கும் உள்ள தொடர்பு எதைப் போன்றது என எண்ணிப் பார்க்கிறான் காதலன். இதோ அவன் எண்ணம், "உடம்போடு உயிர்க்கு உள்ள தொடர்பு எத்தன்மையானதோ, அத்தன்மையானது என் காதலியோடு எனக்கு உள்ள உறவு. இக்கருத்தை மேலும் தெளிவாக்கும் வகையில் அவன் கூறுகிறான். உடம்போடு கூடி வாழ்தலைப் போன்றது. அவள் என்னை விட்டுப் பிரிதல். உயிர் உடலை விட்டு நீங்குவதைப் போன்றது.

**"உடம்பொடு உயிர்இடை என்னமற்று அன்ன**
**மடந்தையொடு எம்இடை நட்பு"** (1122)
**"வாழ்தல் உயிர்க்குஅன்னள் ஆயிழை சாதல்**
**அதற்குஅன்னள் நீங்கும் இடத்து"** (1124)

ஒருவர் பிரிந்தால் மற்றொருவர்க்கு வாழ்க்கை இல்லை என்னும் உயர்ந்த காதலின் முதிர்ந்த நிலையை இவ்வுமைகள் நன்கு புலப்படுத்துகின்றன. குயில்பாட்டில் குயில் பாடுவதாக.

**"காதல் காதல் காதல்**
**காதல் போயின் காதல் போயின்**
**சாதல் சாதல் சாதல்"[3]** (1123)

என்று பாரதியார் பாடியுள்ள அடிகள் இவ்வுமைகளை அடிப்படையாகக் கொண்டவை.

**காதலி கூறும் உவமைகள்**

தலைவியின் களவொழுக்கம் குறித்து ஊரார் அலர் தூற்றுகின்றனர். அவ்வாறு தூற்றப்படும் அலரால் அவள் உள்ளம் வருந்துகின்றது. காதல் பிறர் பழித்துக் கூறும்

சொற்களால் வருந்துகின்றது. காதல் பிறர் பழித்துக் கூறும் சொற்களால் அடங்குவது அன்று. மாறாக மேன்மேலும் வளர்வதே அதன் இயல்பு. ஆனால் ஊராரோ இந்த உண்மையை அறியாமல், அலரால் காதலை அடக்கி விடலாம் என்று கருதுகின்றனர். ஊராரின் எண்ணத்திற்குத் தலைவி ஓர் அழகிய உவமையைக் கூறுகின்றாள். "ஊரார் அலரால் காதலை அடக்கி விடுவோம் என்று கருதுதல், நெய்யால் எரிகின்ற நெருப்பை அவித்து விடுவோம் என்று கருதுவதைப் போன்றது".

**"நெய்யால் எரிநுதப்போம் என்றற்றால் கௌவையால்**
**காமம் நுதுப்பேம் எனல்"** (1148)

காதல் நோயைப் பிறர் அறியாதபடி தன்னுள்ளே மறைக்க முயல்கிறாள் தலைவி. ஆனால் காதலோ அவள் முயற்சியையும் மீறி வெளிப்படுவதற்கு அவள் இரண்டு உவமைகளைக் கூறுகின்றாள். இக்காம நோயை பிறர் அறியாவண்ணம் யான் மறைக்க முயல்வேன். ஆனால் இது நீர் வேண்டும் என்று இறைப்பார்க்கு ஊற்றுநீர் மிகுவது போல் மிகுகின்றது. யான் காமத்தை என்னுள்ளே மறைக்கக் கருதுவேன். ஆனால் அது என் குறிப்பு இல்லாமலும் தும்மல் போல் தானே வெளிப்பட்டு விடுகின்றது.

**"மறைப்பேன்மன் யான்இஃதோ நோயை இறைப்பவர்க்கு**
**ஊற்றுநீர் போல மிகும்"** (1161)

**"மறைப்பேன் காமத்தை யானோ குறிப்புஇன்றித்**
**தும்மல்போல் தோன்றி விடும்"** (1253)

காமநோயைப் பிறர் அறியாமல் மறைக்கவும் முடியாது; தன்னுள்ளே அடக்கிக் கொள்ளவும் முடியாது என்பதைப் புலப்படுத்தத் தலைவி கூறும் அவ்வுவமைகள், எளிய அழகு பெற்று விளங்குகின்றன. காதலரின் பிரிவால் தன் மேனியில் ஊரவிருக்கும் பசலையைப் பற்றி எண்ணிப் பார்க்கிறாள் காதலி. விளக்கினது மெலிவு பார்த்து நெருங்கி வரும் இருளைப் போல காதலருடைய தழுவதலின் மெலிவு பார்த்து நெருங்கி வருகின்றதாம் பசலை.

**"விளக்கு அற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்**
**முயக்கு அற்றம் பார்க்கும் பசப்பு"** (1186)

விளக்கற்றம் பார்க்கும் இருளே போல் என்பது பசலையைப் பற்றிப் புலவர்கள் கையாண்டுள்ள உவமைகளுள் புதுமையானதாகும். மாலைப் பொழுதும், ஆயன் குழலும் காதலரோடு கூடி இருந்த காலத்தில் தலைவிக்கு இன்பம் பயந்தன. தலைவனைப் பிரிந்து தனித்து வாழும் நிலையில், அவை இரண்டும் முறையே கொலைக்களத்துப் பகைவரைப் போலவும், கொல்லுகின்ற படைக் கருவி போலவும் அவளுக்குத் தோன்றுகின்றனவாம். காதலி கூறுகின்றாள், "காதலர் உள்ள பொழுதெல்லாம் என் உயிர் தவிர்க்க வந்த மாலை, அவர் இல்லாத இப்பொழுது, கொலைக்களத்துப் பகைவரைப் போல என் உயிர்க் கவர்ந்து கொள்வதற்கு வருகின்றது. முன்னெல்லாம் இனியதாக இருந்த ஆயனது குழல், இப்பொழுது நெருப்பைப் போல சுடுவதாகிய மாலைப் பொழுதிற்குத் தூதாகி, என்னைக் கொல்லும் படையுடன் ஆயிற்று."

**"காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து**
**ஏதிலர் போல வரும்"** (1224)

**“அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்**
**குழல்போலும் கொல்லும் படை”** (1228)

காதலரைப் பிரிந்து தனிமையில் வாடும் தலைவி, மாலைப் பொழுது தனக்குத் தரும் துன்பத்திற்கு உவமை கூறும்போது, மாலைக்காலத்து ஆநிரையுடன் வரும் கோவலரின் குழலோசை கொல்லும் படை போல் தன்னை வருத்துகின்றது என்று கூறுவது பொருத்தமாக உள்ளது. “உயர்ந்த கவிதைகளில் உவமைகளும், உருவகங்களும் புறத்தே நிற்பன அல்ல. அவையே கவிதையின் அகவுறுப்புகளாகி, கவிதையுடன் இரண்டறச் சேர்ந்து ஒன்றி நிற்கின்றன.”[4] என்பது க. கைலாசபதியின் கருத்தாகும். இவ்வாறு கவிதையின் புறத்தே நில்லாமல், கவிதையின் அகவுறுப்பாய், கவிதையோடு இரண்டறக் கலந்து நிற்கும் உவமைகள் பலவற்றைக் காமத்துப்பாலில் காணலாம்.

**தோழி கூறும் உவமை**

பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வருகின்றான். அவனோடு சிறிது நேரம் ஊடல் கொண்டு இருக்க வேண்டும் என்றும், அங்ஙனம் ஊடும் போது அவன் அடைகின்ற துன்ப நோயைச் சிறிது காண வேண்டும் என்றும் தலைவி விரும்புகிறாள். இந்த நிலையில் ’புலவியை நீள விடுதல் தகாது” என்னும் கருத்தில் தோழி தலைவிக்குக் கூறுகிறாள். “ஊடல் என்பது உப்பு உணவில் அளவோடு அமைந்திருப்பதைப் போன்றது. ஊடலை அளவு கடந்து நீட்டித்தல் என்பது அந்த உப்பு உணவில் சிறிது அளவு மிகுதியாக இருப்பதைப் போன்றது.

**“உப்புஅமைந் தற்றால் புலவி அதுசிறிது**
**மிக்கற்றால் நீள விடல்”** (1302)

“உப்பு மிக்கவழித் துவர்ப்பு மிகுதியாதல் போலப் புலவி மிக்க வழிக் கல்வி இன்பம் இன்றாம் என்றமையின், இது பண்புவமை”[5] என்று இக்குறளின் உரையில் கூறுவர் பரிமேலழகர். உணவுப் பொருள்களைச் சுவையாகச் சமைத்துத் தருவதில் தேர்ச்சி பெற்ற மக்களின் பேச்சில், அவர்களோடு நெருங்கிய தொடர்பினை உடைய உவமைப் பொருள் அமைந்து கிடத்தல் எண்ணி மகிழத் தக்கதாகும்.“வள்ளுவர் படைத்த பாத்திரப் படைப்புக்கள், அவரவர் அறிந்து உணர்ந்து தெளிந்த பொருள்களையும் கருத்துக்களையுமே உவமையாகப் பயன்படுத்திக் கூறும் நிலையில் உள்ளன.”[6] என்பர் இ. சுந்தரமூர்த்தி. “நெய்யால் எரிறுதப்பேம் என்றற்றால்’ (1148) ’விளக்கற்றம் பார்க்கும் இருளே போல்’ (1186) ’எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல்’ (1285) ’உ்பபமைந் தற்றால் புலவி’(1302) என வரும் உவமைகள் இக்கூற்றுக்குச் சிறந்த சான்றுகளாம்.

**பிற உவமைகள்**

திருவள்ளுவர் சில குறள்களில் ஓர் அறக்கருத்தைப் புலப்படுத்தப் பிறிதோர் அறக்கருத்தையே உவமையாக்கிக் கூறும் நெறியை மேற்கொண்டுள்ளர். அதனால் திருக்குறள் முழுவதுமே அற மணம் கமழ்கிறது. “திருவள்ளுவர் அற உவமைகளை இரு வகைகளில் கையாண்டுள்ளார். ஓர் அதிகாரத்தில் கூறிய அறக்கருத்தையே சிறப்புக் கருதியும் வலியுறுத்தக் கருதியும் பிறிதொரு அதிகாரத்தில் உவமை வடிவில் கையாள்வது முதல் வகை. எந்த அதிகாரத்திலும் இடம்பெறாத புதிய அறக்கருத்தை உவமை வாயிலாகக் கூறுவது இரண்டாம் வகை”[7] என்பர் இரா. சாரங்கபாணி. இவ்விரு வகைகளுக்கும் சான்றாகச் சில குறள்களைக் காணலாம். திருக்குறளில் வலியுறுத்திப்பெறும் சீரிய அறங்களுள் ஒன்று பகுத்துண்டு வாழும்

வாழ்வாகும். 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' (332) எனவும், 'பாத்தூண் மரீஇ யவனை' (227) எனவும், 'பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின்' (44) எனவும் வரும் குறள்களில் திருவள்ளுவர் பகுத்துண்டு வாழும் வாழ்வினைப் பாராட்டியுள்ளார். காமத்துப்பாலில் 'புணர்ச்சி மகிழ்தல்' என்னும் அதிகாரத்தில் காதலரின் புணர்ச்சி இன்பத்தைக் கூறும்போது அவர், பகுத்துண்டு வாழும் வாழ்வின் இன்பத்தினை உவமையாகக் கூறியுள்ளார். 'அழகிய மாமை நிறம் உடைய தலைவியின் தழுவுதல், தம்முடைய இல்லத்தில் இருந்து தம் முயற்சியில், ஈட்டிய பொருளை இல்லாதவர்களுக்குப் பகுத்துக் கொடுத்து உண்டாற் போன்றது' என்பது இக்குறளின் கருத்து.

**“தம்இல் இருந்து தமதுபாத்து உண்டற்றால்**
**அம்மா அகவை முயக்கு”** (1107)

அறிவு பற்றிய கருத்துக்களை வள்ளுவர் 'கல்வி' 'கல்லாமை', 'கேள்வி', ' அறிவுடைமை' ஆகிய நான்கு அதிகாரங்களில் விரிவாகக் கூறியுள்ளார். எனினும் அறிவின் சிறந்த இயல்பு ஒன்றினை அவர் அவ்வதிகாரங்களில் கூறவில்லை. அதனைக் காமத்துப்பாலில் 'புணர்ச்சி மகிழ்தல்' என்னும் அதிகாரத்தில் கூறியுள்ளார்.

**“அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்**
**செறிதோறும் சேயிழை மாட்டு”** (1110)

செந்நிற அணிகலன்களை அணிந்து காதலியைப் பொருந்துத்தோறும் பொருள்களை அறிய அறிய முன் அறியாமை கண்டாற் போன்றது என்பது இக்குறளின் கருத்தாகும். “உலகப் பொருள்களையும். அவற்றின் நிகழ்ச்சிகளையும். பண்புகளையும் எடுத்து உவமங் காட்டுதலே அன்றி ஒரு கல்லில் இரண்டு மாங்காய் விழ எறிகின் வீரம் போல கண்ணன், கன்றைக் கொண்டு விளவு எறிந்து இரு பயன் கொண்டது போல, ஒரு நீதியையே உவமமாகக் காட்டி, ஒரு பயனை எல்லாரும் எய்த வைப்பார் திருவள்ளுவர்”[8] என்பது ச. தண்டபாணி தேசிகரின் கருத்தாகும் “ஒரு கவிஞனுடைய திறமையை உள்ளவாறு மதிப்பிட உதவுவது அவனுடைய உவமைத்திறன் என்று கூறினால் மிகையாகாது. நாம் அன்றாடம் கண்டும் காணாத பொருள்களினிடத்து உள்ள அரிய இயல்புகளைக் கவிஞன் கண்டு சமயம் வரும் பொழுது அவற்றைத் தக்கவாறு பயன்படத்துவிடுகிறான். இவ்வாறு பயன்படத்தும் உவமை அவனுடைய கல்வி, இயற்கை அறிவு, அனுபவம் பரந்த மனப்பான்மை, நுனித்துக் காணும் காட்சி முதலியவற்றுக்கு ஏற்பத் தோன்றும்”[9] என்பர் அ. ச. ஞானசம்பந்தன்.

**முடிவுரை**

- காமத்துப்பாலில் திருவள்ளுவர் கையாண்டுள்ள உவமைகள் அவருடைய புலமையை நன்கு புலப்படுத்துகின்றன.
- அருமை, எளிமை, அழகு ஆகிய மூன்று பண்புகளையும் தன்னைகத்தே கொண்டு விளங்குகின்றன.
- இயற்கையையும், வாழக்கையையும், உலகத்தையும் திருவள்ளுவர் கூர்ந்து நோக்கியுள்ள திறத்தைப் புலப்படுத்துகின்றன.

## குறிப்புகள்

1. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், தமிழ் மொழியின் வரலாறு, ப.60–61
2. தமிழண்ணல், குறிஞ்சிப்பாட்டு, ப.80
3. பாரதியார் கவிதைகள், ப.284
4. க. கைலாசபதி மற்றும் இ. முருகையன், கவிதை நயம், ப.32
5. திருக்குறள் உரைக்கொத்து – காமத்துப்பால், ப.249
6. இ. சுந்தரமூர்த்தி, திருக்குறள் அணிநலம், ப.122
7. இரா. சாரங்கபாணி, குறள் விருந்து, ப.102
8. ச. தண்டபாணி தேசிகர், திருக்குறள் அழகும் அமைப்பும், ப.138
9. அ. ச. ஞானசம்பந்தன், கவிதைப் பண்பு, திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு. 19